
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**793**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

4

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# அக்ரஹாரத்தினுள்ளும் ஒலித்த கலைஞரின் கலகக்குரல்!







படங்கள் உதவி : ஞானம்



கலைஞரின் திரைக்கதை வசனத்தில் 1961-ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படம் ‘தாயில்லாப் பிள்ளை’. நூற்றாண்டு கண்ட தமிழ்த் திரையுலகம் அதற்கு முன்னும் பின்னும் பார்த்திராத ஓர் அபூர்வமான திரைப்படம் அது. அந்தக் காலகட்டத்தில் அந்தத் திரைப்படம் ஓர் கலகக் குரல் என்று சொல்லலாம்.

மிகச்சிறந்த கதை, திரைக்கதை, வசனம் மற்றும் நடிப்பும் இயக்கமும் ஒருங்கே அமைந்த படம். பார்ப்பன மொழிநடையை கலைஞர் மிக அற்புதமாகக் கையாண்டதைக் கண்டு கல்கியே வியந்து போனதாகக் கூறுவர். மேலும், அந்தப் படம் வரலாற்று ஆவணம் என்றும் சொல்லப்பட வேண்டும்.

ஏனென்றால், 2000-க்கு முன்பு பிறந்த தலைமுறையே அறிந்துகொள்ள முடியாத 1950 காலத் தமிழ்ச் சமூக நிலவரத்தை, மிகத் தெள்ளத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டிய திரைப்படம் ‘தாயில்லாப் பிள்ளை’.

2000-த்துக்கு முன் பிறந்த தலைமுறை, 1970 - 80 களில் ‘சவாலே சமாளி’, ‘வண்டிக்காரன் மகன்’ போன்ற திரைப்படங்களில் நாகப்பன் அல்லது நாகலிங்கம் என்கிற பெயர்களில் கொடிய இடைநிலைச் சாதிப் பண்ணை யார்களாக வந்த அசோகன், நம்பியார் அல்லது ஆர்.எஸ்.மனோகர் ஆகியோர் ஏழை எளிய மக்களை ஒடுக்கும், பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்யும் காட்சிகளைத் திரையில் பார்த்திருக்கும்.

நமது 2-கே கிட்ஸ் என்கிற தலைமுறைக்குக் கிராமப்புறப் பண்ணையார்கள் திரைப்படம் என்றால், விஜயகுமார், சரத்குமார் ஆகியோர் நடித்த (நாட்டாமை, சூரிய வம்சம்), ரஜினி (எஜமான்), விஜயகாந்த் (சின்னக்கவுண்டர்), சிவாஜி, கமல் (தேவர்மகன்) ராஜ்கிரண், விஷால், தனுஷ் (சண்டைக்கோழி, வேங்கை) போன்ற கதாநாயகர்கள் தோன்றி ஏழை எளிய மக்களைப் படிக்க வைத்தும் பெண்களின் ‘கற்பை’ காப்பாற்றியும் நீதி நேர்மையைக் கட்டிக் காத்துக் கொண்டும் திரிந்த படங்கள்தான் நினைவுக்கு வரும்.

அதாவது நிலப்பிரபுத்துவக் கொடுமை என்னவென்று அறியாத இந்தத் தலைமுறையினர், எவ்வாறு பார்ப்பனப் பண்ணையார்களைப் பற்றித் தெரிந்திருக்க முடியும்? பார்ப்பனர்கள் பண்ணையார்களாக இருந்தார்களா? அப்பாவிப் புரோகிதர்களா ஜாதித் தீண்டாமை பார்த்தார்கள்? நம்மை ஒடுக்கினார்கள்? என அந்தப் படத்தை பார்த்து வியப்படையலாம்.

இன்றைய தமிழ் சினிமா காட்டும் பண்ணையார்களைப் பார்த்து ரசிக்கும் தலைமுறையினருக்கு, பார்ப்பனர்கள் கைகளில் கிராமப்புற உள்ளூர் அதிகாரம் இருந்தது என்றும், அப்போது பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை என்னவாக இருந்தது என்பதையும் காட்டுவதற்கு ‘தாயில்லாப் பிள்ளை’ திரைப்படத்தைப் பார்க்க வைக்க வேண்டும்.

50 ஆண்டுகளுக்கு பின்னால் வரும் ஒரு தலைமுறை, தமிழ்நாட்டின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளட்டும் என, கலைஞர் திரையில் உருவாக்கி வைத்துச் சென்றுள்ள ஓர் ஆதாரம்தான் ‘தாயில்லாப் பிள்ளை’ திரைப்படம்.

### படத்தின் கதை

ஆச்சார அனுஷ்டானங்களில் ஊறித் திளைத்த பதஞ்சலி சாஸ்திரி (டி.எஸ்.பாலையா). அவரது மனைவி பார்வதி (எம்.வி.ராஜம்மா). பார்வதியின் அண்ணன் டாக்டர் பாரதி (ஆர்.எஸ்.மனோகர்) பார்ப்பன ஜாதி ஆச்சாரத்தை மீறி, கலப்புத் திருமணம் செய்துகொண்ட கொள்கை வீரர். அவரது மனைவி சுசீலா (நடிகை சந்தியா). பதஞ்சலி சாஸ்திரியின் தங்கை கெங்கம்மா (டி.பி.முத்துலட்சுமி) அவரது கணவர் சங்கு ( எஸ்.ராமாராவ்). சாஸ்திரி வீட்டு வேலையாள் புண்ணியவான் இவர்களுக்கு இடையேதான் இப்படத்தின் கதை நடக்கிறது.

பார்வதிக்கு இருமுறை கர்ப்பம் தரித்தும் குழந்தை தங்காமல், கரு கலைந்து விடுகிறது. இந்நிலையில், மூன்றாவதாகக் கர்ப்பம் தரிக்கிறார். இந்த முறையாவது தனக்குக் குழந்தை நல்லவிதமாகப் பிறக்க வேண்டுமே என்ற கவலையால் தனது அண்ணன் டாக்டர் பாரதிக்கு உதவி வேண்டி கடிதம் எழுதுகிறாள்.

பாரதியோ தான் ஜாதி மாறித் திருமணம் செய்து கொண்டதற்காகத் தன்னை பதஞ்சலி சாஸ்திரி வீட்டை விட்டு துரத்தியதையும், தன் மீது அவருக்குள்ள கோபத்தையும் பொருட்படுத்தாது, தங்கையின் நலனுக்காக அவளைக் காண வந்து, அவளைப் பரிசோதித்து மருந்து கொடுத்துக் கொண்டிருக்கும் வேளையில் பதஞ்சலி சாஸ்திரி வீட்டுக்குள் நுழைகிறார்.

போதாக்குறைக்கு பதஞ்சலி சாஸ்திரியைப் பஞ்சாயத்துத் தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்ட தூயமணி என்கிற பார்ப்பனர் அல்லாத ஜாதி வேட்பாளருக்கு ஆதரவாகப் பாரதி பிரச்சாரம் செய்து, அதனால் பதஞ்சலி சாஸ்திரி தோற்றுப் போன செய்தியும் வந்து சேர்ந்துகொள்ள, ஜாதி கெட்டவளைத் திருமணம் செய்தவன் எப்படி என் வீட்டுக்குள் வரலாம் என்று கோபத்தில் கொதிக்கிறார். அண்ணன் மீது தவறில்லை, நான்தான் குழந்தை நல்லபடியாகப் பிறக்க வேண்டுமே என்பதற்காக அவரை வரவழைத்து, மருந்து வாங்கினேன் என்கிறார் பார்வதி.

மருந்துப் புட்டிகளைத் தட்டிவிடும் சாஸ்திரி, அண்ணன் தங்கை இருவரையும் வீட்டை விட்டுத் துரத்துகிறார். பார்வதி எவ்வளவோ மன்றாட, ‘எனக்கு என் ஜாதி ஆச்சாரம்தான் முக்கியம், நீ இங்கிருந்தால் நான் தற்கொலை செய்து கொள்வேன்’ என்று மிரட்டுகிறார்.

### சமூகப் புரட்சிக்கு சாட்சியம்!

பார்வதியும் வேறு வழி இன்றி, தன் அண்ணன் வீட்டுக்கு வந்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். உடனே பாரதி, குழந்தை பிறந்த செய்தியை, பதஞ்சலி சாஸ்திரிக்குக் கடிதம் மூலம் தெரிவிக்கிறான். சாஸ்திரிகள் தனது பார்ப்பனக் கூட்டாளிகள் மற்றும் தனது தங்கை கெங்கம்மா ஆகியோரது ஆலோசனையின்படி, ஜாதி கெட்டவனின் தங்கையான பார்வதியை விட்டுவிட்டு தனது குழந்தையை மட்டும் போய் தூக்கிக்கொண்டு வந்து விடுகிறார். ஆனால், அவர் தூக்கிக் கொண்டு வந்தது அவரது குழந்தை அல்ல!

ஆம், டாக்டர் பாரதி மருத்துவம் பார்க்கச் சென்ற இடத்தில் ஏழைக் குடியானவன் பொன்னனின் (செந்தாமரை) மனைவி இறந்து போக அவர்களது கைக் குழந்தையை வளர்க்க வேண்டிய நிலை டாக்டர் பாரதிக்கும் அவர் மனைவி சுசீலாவுக்கும் வந்து சேர்கிறது. அந்தக் குழந்தை பசியால் அழுகிறது. மனசு கேட்காமல், ஜாதி வேறுபாடு ஆச்சாரம் பார்க்காமல் பார்வதியே அக்குடியானவக் குழந்தைக்கும் தாய்ப்பால் ஊட்டி வளர்க்கிறாள். அவ்வாறு ஒரு முறை பொன்னனின் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கும் வேளையில்தான் பதஞ்சலி சாஸ்திரி அங்கு வந்து, அது தனது குழந்தை என்று கருதி தூக்கி வந்து விடுகிறார்.

அவரிடம் அது ஒரு குடியானவனின் குழந்தை, அதற்கும் நான்தான் பாலூட்டினேன் என்ற உண்மையைக் கணவனிடம் பார்வதியால் சொல்ல முடியவில்லை. மேலும் பதஞ்சலி சாஸ்திரி பார்வதியைக் கதற விட்டுவிட்டு குடியானவனின் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வேகமாகக் காரில் பறந்து வந்து விடுகிறார். தனது அண்ணனிடம் பார்வதி நடந்ததைக் கூறி கதறி அழுகிறார். டாக்டர் பாரதியோ ‘அக்ரஹாரத்தில் ஒரு குடியானவனின் குழந்தை! வளரட்டும், அதுவே சமூகப் புரட்சி ஆகும்! ’ என்று கூறி தேற்றுகிறார்.

இந்த இடத்தில் இருந்துதான், திராவிட இயக்கக் கொள்கையில் இருந்து சிறு நூலளவு கூடப் பிசகாத வகையில், கலைஞரின் கைவண்ணம் வெளிப்படும்... அந்தச் சமூகப் புரட்சியை எப்படி நிகழ்த்தி இருப்பார் என்பதை வரும் வாரத்தில் பார்ப்போம்.

...காட்சி விரியும்

> **திராவிட இயக்கக் கொள்கையில் இருந்து சிறு நூலளவு கூடப் பிசகாத வகையில், கலைஞரின் கைவண்ணம் வெளிப்படும்...**

## இதுதான் பா.ஜ.க.வின் உண்மை முகம்!

குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்துப் பறிப்பு, சிறுபான்மை மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை நிறுத்தம், வன்முறைகள், வெறுப்புப் பேச்சுகள் என பா.ஜ.க. ஆட்சியில் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால், தமிழக பா.ஜ.க.வோ இப்தார் நோன்பு துறந்து, இஸ்லாமியர்களை அரவணைக்கும் அரசியல் நாகரீகம் கொண்ட கட்சி போல, தங்களைக் காட்டிக்கொள்ள மெனக்கெட்டது.

எனினும் பா.ஜ.க.வின் உண்மை முகம் என்னவென்பதை, பல மாநிலங்களில் அவர்களே வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் அரசுப் பணியில் இருக்கும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நோன்பு துறக்க வசதியாக, மாலையில் ஒரு மணி நேரத்திற்கு முன்பாக, பணியில் இருந்து செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதை தேசத்துரோகக் குற்றம் போல சித்தரித்து பா.ஜ.க.வினர் கண்டிக்கிறார்கள்.

அதேபோல ஹரியானா மாநிலத்தில், ரமலான் தினத்தன்று அரசு பொது விடுமுறை என்பதை மாற்றியுள்ளனர். இது எல்லோருக்குமான கொண்டாட்டம் அல்ல, தேவைப்படுவோர் மட்டும் விடுமுறை எடுத்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்திருக்கிறது அம்மாநில பா.ஜ.க. அரசு. இதே ஹரியானா மாநிலத்தில்தான் சில மாதங்களுக்கு முன்பு, காவல்துறை அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டத்தில், ‘ராம பஜனை’ நடத்தினார்கள். அதற்கு எந்தத் தடையும் இல்லை அங்கே!

ஏற்கெனவே தமிழர்களின் பெருவிழாவான பொங்கல் தினத்தன்று, வேண்டுமென்றே தேர்வுகளை அறிவிப்பதும், நமது முதலமைச்சர் கண்டித்த பிறகு, தேர்வை ஒத்திவைப்பதையும் ஒன்றிய அரசு வாடிக்கையாகக் கொண்டுள்ளது. இப்படி மொழி ரீதியாகவும், மதத்தின் அடிப்படையிலும் மற்றவர்களின் கொண்டாட்டங்களையும், பண்பாட்டு அடையாளங்களையும் நசுக்குவது, இந்திய அரசியலமைப்பின் பன்முகத்தன்மைக்கு எதிரானது என்பதை ஒன்றிய அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### இந்தி எதிர்ப்பு மாநாட்டில் எங்கள் நினைவுப் பரிசு!



எம்.ஏ.சேக் முகம்மது

1991-ஆம் ஆண்டு கோவையில், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, ‘மாநில மாநாடு’ நடைபெற்றது. அப்போது தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு இராமநாதபுரம், மண்டபம் ஒன்றியம் சார்பாக, சிறப்பான கைவினைப் பொருள் நினைவுப் பரிசை வழங்கினோம். உடன் என்னுடைய நண்பர் இன்றைய மாநில விவசாய அணி துணைச் செயலாளர் நல்லசேதுபதி உள்ளார். எங்கள் நினைவில் என்றைக்கும் நிலைத்திருக்கும் புகைப்படம் இது.

**– எம்.ஏ.சேக் முகம்மது எம்.ஏ.,**
**ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர்,**
**மண்டபம், இராமநாதபுரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் கலைஞரின் வெற்றி!

1984-ஆம் ஆண்டு, எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில், மே மாதம் 20-ஆம் தேதி நான்கு தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. அந்த இடைத்தேர்தலில் ஆளுங்கட்சியின் செல்வாக்கையும் மீறி, அண்ணாநகர், மயிலாடுதுறை ஆகிய 2 தொகுதிகளில் கழகம் வெற்றி பெற்றது. கழகத்தின் அந்த இரண்டு வெற்றிகளும், பெரும் வெற்றிகள் என்று அப்போது பத்திரிகைகள் எழுதின.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131